Regional Transport Office in Anna Nagar, Madras.

*Q. No. 35— Thiru R. E. CHANDRAN JAYAPAL : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal under the consideration of the Government to shift the Office of the Regional Transport officer, Madras Central Range now functioning in 5th Street, Anna Nagar consequent on the declaration of the Anna Nagar area Madras as a residential area ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

ஆண்டிமடம் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை.

*வினா எண். 36— திரு. டி. சுப்பிரமணியன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் தொகுதியில் முந்திரிக் கொட்டை தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : புதிதாக எந்தெந்த மாவட்டங்களில் முந்திரி பயிரிடுவதற்கு அரசு திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது ? அதே போன்று சேலம் மாவட்டத்திலும் புதிதாக ஒரு முந்திரித் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மூலமாக வேளாண்மைத் துறையால் தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் விளக்கப்பாத்திகள் அமைத்து பதியம் போடுவது, பழத் தோட்டங்கள் அமைப்பது போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் முந்திரி பயிரிடுவதற்கான தட்பவெப்ப நிலை உள்ள இடங்கள் இருக்குமரனால் அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு செய்யப்படலாம்.

[1979 அக்டோபர் 29

திரு. கே. சௌந்திரராசன் : ஆண்டிமடம் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆண்டிமடம் தொகுதி என்பது திருச்சி மாவட்டத்தில் வைத்தே பிற்படுத்தப்பட்ட தொகுதி. அங்குள்ள மக்களுக்கு எந்தவிதமான வேலை வாய்ப்பும் இல்லை, எந்தவிதமான தொழிற்சாலையும் அதற்கு அருகாமையில் இல்லாத சூழ்நிலையில் அங்குள்ள மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதி முந்திரி ஏராளமாக விளையும் பகுதியாகும். ஆகவே அரசாங்கம் அங்கு ஒரு முந்திரித் தொழிற்சாலை அமைத்திட மீண்டும் அது குறித்து மறுபரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே இருக்கக்கூடிய முந்திரித் தொழிற்சாலைகளுக்கு 1,24,000 டன் முந்திரி தேவைப்படுகிறது. ஆனால் நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய முந்திரியின் அளவு 10,000 டன் . இறக்குமதி மூலம் கிடைப்பது 19,000 டன். இன்னும் நமக்குத் தேவை 95,000 டன். இன்னும் கூடுதலாக முந்திரி பயிரிட்டு ஏற்கனவே இருக்கக் கூடிய தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் வழங்கியதற்குப் பிறகு மற்றப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைப்பதுபற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : திருச்சி மாவட்டத்திலிருந்து பிரிந்து புதிதாக உருவாகியிருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தில் காட்டிலாகா சார்பாகவும், தனியார் சார்பாகவும் அதிகமான முந்திரி சாகுபடி செய்கிற பகுதியாக இருப்பதன் காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கந்தவர்க்கோட்டையில் ஒரு தொழிற்சாலை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கூடுதலாக முந்திரி பயிரிட்டு ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை பெற்றதற்குப் பின்னால் புதிதாக தொழிற்சாலைகள் நிறுவினால் லாபகரமாக இருக்கும், நன்மை பயக்கும் என்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகம் இராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் கிட்டதட்ட நாலாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் புதிதாக பயிரிட முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிகமான அளவிற்கு முந்திரி பயிரிடப்பட்டு எதிர்பார்க்கக் கூடிய அளவிற்கு மூலப் பொருள் கூடுதலாகக் கிடைக்கும்போது கந்தர்வகோட்டையும் பயனடையும்.

திரு. ர. ஜெபமணி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் சாத்தான்குளம் பகுதியில்.................

1979 அக்டோபர் 29]

[முற்பகல் 9.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியவருக்குச் சொல்லிக் கொள்கிறேன், இது ஆண்டிமடம் சம்பந்தப்பட்ட கேள்வி, நீங்கள் கேட்கின்ற விவரங்கள் அமைச்சரிடம் இருக்காது.

திரு. ர. ஜெபமணி ; நான் விவரங்களைக் கேட்கவில்லை. வேண்டுகோள் தான். சாத்தான்குளம் பகுதியில் ஏறத்தாழ 9,000 ஏக்கரில் முந்திரி மரங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் அழிந்து கொண்டிருக்கின்றன. மேலும் இந்த மரங்கள் எல்லாம் அழிந்து போகாமல் அரசாங்கம் முன்வந்து நல்ல முறையில், கவனித்து, முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கவனத்தில் கொள்ளப்படும்.

மதுரையில் பால் வழங்கல்.

*வினா எண். 37—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை பால்வள நிறுவனத்தில் பாலித்தின் பைகள் மூலமாக பால் வழங்குவதை விரிவாக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ்நாடு பால் வள நிறுவனம், மதுரையில் பாலை பாலித்தீன் பைகள் மூலமாக் விநியோகம் செய்வதை அதிகரித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பால்வளநிறுவனம் தனியார்களிடமிருந்துதான் பாலதீன் பைகளை வாங்குகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? அது உண்மை யென்றால், அரசே இந்த பாலிதீன் பைகளை தயாரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே பால்வள நிறுவனம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தயாரிக்கப்படும் பாலிதீன் பைகளை வாங்குகிறது, அத்துடன் தமிழ் நாட்டில் தனியார்களும் இந்த பாலிதீன் பைகளை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களிடமிருந்தும் டெண்டர்கள் மூலமாக, யார் குறைவான விலைக்கு கொடுக்க முன்வருகிறார்களோ அவர்களிடமிருந்து பெற்றுகொண்டிருக்கிறோம்.